இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

விலைமனு கோரல்

"சுஹுருபாய" கட்டிடத்தில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 1ஆம் மற்றும் 2ஆம் மாடிகளில் உள்ள C மற்றும் D பிரிவுகளுக்கு (பொது இடம்) தரை கம்பளங்களை வழங்குதல், கொண்டுவருதல் மற்றும் பொருத்துதல் தொடர்பான கொள்முதல்.

ஒப்பந்த இலக்கம்: DIE/PRO/02/2026/33

1. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் திணைக்களக் கொள்முதல் குழுவின் தலைவரால்"**சுஹுருபாய" கட்டிடத்தில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 1ஆம் மற்றும் 2ஆம் மாடிகளில் உள்ள C மற்றும் D பிரிவுகளுக்கு (பொது இடம்) தரை கம்பளங்களை வழங்குதல், கொண்டுவருதல் மற்றும் பொருத்துதல்** தொடர்பாக, தகுதியான மற்றும் தரமான விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கப்படுகின்றன.

2. விலைமனுக்கள் தேசிய போட்டி முறை (NCB) மூலம் நடத்தப்படும்.

3. ஆங்கில மொழியில் உள்ள முழுமையான விலைமனு ஆவணத் தொகுப்பை, ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர வீதி, "சுஹுருபாய", B பிரிவு, 5ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், கொள்முதல் பிரிவு, பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களுக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், **2026.09.25 முதல் 2026.10.09 வரை வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை**மீள்ளிக்கப்படாத கட்டணமான இலங்கை ரூபா ஐயாயிரம் (5,000/=) செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். கட்டணம்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

4. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் **வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை** 0112-101559 என்ற இலக்கத்தின் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை **2026.09.25 முதல் 2026.10.09 வரை** கட்டணமின்றி பரிசீலனை செய்ய முடியும். அத்தோடுதிணைக்களத்தின் இணையதளம் (www.immigration.gov.lk) மூலமாகவும் பரிசீலிக்க முடியும்.

5. முறையாக பூரணப்படுத்தப்பட்டவிலைமனுக்கள் "மூலப் பிரதி" (Original) மற்றும் "இணைப்பிரதி" (Duplicate) என தனித்தனி உறைகளில் இணைக்கப்படல் வேண்டும். பின்னர், இவை ஒரு ஒற்றை உறையினுள் வைக்கப்பட்டு, முத்திரையிடப்பட்ட இந்த உறையின் இடதுபுற மேல் மூலையில்ஏற்புடைய ஒப்பந்தத்தின் பெயரும் IFB இலக்கமும் தெளிவாகக் குறிக்கப்பட்டு, பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பந்தி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடப்படல் வேண்டும், **2026.10.09 ஆம் திகதிபிற்பகல் 2.00 மணிக்கு முன்னர்.**விலைமனு சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அல்லது கொள்வனவாளரால் நிர்ணயிக்கப்படும் நீட்டிக்கப்பட்ட எந்தவொரு திகதியிலிருந்தும் தொண்ணூற்றொரு (91) நாட்கள் வரை விலைமனு செல்லுபடியாகும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள்அழைக்கப்பட்டு முடிந்த பின்னர், கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

6. அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபா இலட்சம்(ரூ. 300,000.00) பெறுமதியுள்ள விலைமனுப் பிணையத்துடன் (Bid Security) இணைக்கப்பட வேண்டும், இது விலைமனுஅழைப்பு முடிவடையும் திகதியிலிருந்து நூற்றுப் பத்தொன்பது (119) நாட்களுக்கு செல்லுபடியாகும்.(2027.02.05 வரை செல்லுபடியாகும்).

7. விலைமனு முன் சந்திப்புக் **கூட்டம் 2026.10.02 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு** பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர வீதி, "சுஹுருபாய", 5ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவில் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அதே நேரத்தில் தளத்தைச் சென்று பார்வையிடலாம்.

தலைவர்,
திணைக்கள கொள்முதல் குழு,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
5ஆம் மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.